[18th January 1964

பூம்பாறை பஸ் விபத்து

* 26 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி (திரு. பி. கே. மூக்கையா தேவர் சார்பாக) : கனம் கைத்தொழில் அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ந் தேதியில் கொடைக்கானல் அருகே பூம்பாறையில் ஏற்பட்ட பஸ் விபத்தால் எத்தனை பேர் உயிர் நீத்தனர் ?

(இ) விபத்தில் உயிர் நீத்த டிரைவர், கண்டக்டர், பிரயாணிகள் குடும்பங்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்கப்பட்டதா ?

(உ) குறிப்பிட்ட பஸ் கம்பெனி கொடுக்கவில்லை என்றால் கொடுக்குமாறு செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Four adults and a baby.

(b) & (c) The legal heirs of the four of the five deceased persons and seven of the twenty-four injured persons have preferred compensation claims before the Claims Tribunal. All information about the Bus Company and the Insurance Company has already been furnished to the injured persons as also to the legal heirs of the deceased by the Police for claiming compensation. The cases for compensation are pending.

திரு. செ. மாதவன் : தனிப்பட்ட பஸ் முதலாளிகள் அதிகமாக இருக்கிற காரணத்தினால், போட்டி போட்டுக்கொண்டு பஸ்களை வேகமாக ஓட்டுகிறார்கள். அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிடுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ஆக்ஸிடென்ட் அந்தக் காரணத்தால் ஏற்படவில்லை. எதிரே ஒரு லாரி வந்தது. கீழேயிருந்து பஸ் போயிற்று. பஸ் போவதற்கு இடம் சரியாக இல்லை. ஒதுக்கி ஓட்டின உடனே கீழே விழுந்துவிட்டது.

திரு. இராம. அரங்கண்ணல் : இதைப் போன்ற குன்றுகள் உள்ள இடங்களிலே பாதைகளை அகலப்படுத்துவதற்கு அரசாங்கம் தனியாக ஒரு திட்டம் வகுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எங்கெங்கே பாதையை அகலப்படுத்த முடியுமோ அங்கே அகலப்படுத்தலாம். எல்லா இடங்களிலும் ரோட்டை அகலப்படுத்துவது சாத்தியமாக இருக்காது. ஆகவே ஒரு பஸ்ஸை நிறுத்திக் கொண்டு, மற்ற பஸ் போனபிறகு போவதுதான் சரியாக இருக்கும்.

Dhrangadhra Chemicals, Limited, Sahupuram

* 27 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of acres of wet and dry lands acquired, alienated and leased out so far in favour of Messrs. Dhrangadhra Chemical Works, Limited, Sahupuram, in Arumuganeri ;